2022 No. of Printed Pages : **4**

2022 11th year 61496

**4859**

Register Number

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

**அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

1. தீங்கனி – பிரித்தெழுதி புணர்ச்சி விதி தருக.

2. ஈராறாண்டு – இச்சொல்லை பிரித்து எழுதி விதி கூறுக.

3. புறந்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்.
– இக்குறட்பாவில் அகத்தூய்மை என்னும் சொல்லிற்கு பொருள் கூறி விளக்கம் தருக.

4. சாலச்சிறந்த, கூர்தவம் – என்னும் சொற்களில் இடம் பெறும் உரிச்சொற்களை எடுத்தெழுதுக.

5. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும் ? அத்தொடரில் அடுக்குத் தொடருக்கு உதாரணம் தருக.

6. இலக்கணப் போலி என்றால் என்ன ? இரண்டு உதாரணம் தருக.

7. கவிதையைப் பற்றி வோர்ட்ஸ்வொர்த், கீட்ஸ் கூறிய வரையறைகளை எழுதுக.

[ Turn over

8. பேச்சாற்றலை வளர்க்க பட்டிமன்றம் மிகவும் சிறந்தது. இக்கூற்று சரியா ? விளக்கம் தருக.

9. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன ?

10. தேன் என்னும் சொல்லின் முன் மெல்லினம் வந்தால் வேற்றுமை, அல்வழியில் எவ்வாறு புணரும் ?

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். 5x4=20

11. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? ஆசிரியப்பா பற்றி விளக்கவும்.

12. பல பொருள் தரும் ஒரு சொல் இரண்டினை கூறி விளக்குக.

13. எட்டுத்தொகை, ஐம்பொறி – தொகைச் சொற்களை விரித்தெழுதுக.

14. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.
(திருவருட்பா)

இப்பாடலில் இடம்பெற்றுள்ள நயங்களை தொகுக்கவும்.

15. ''உழைப்பின் மேன்மை'' என்னும் தலைப்பில் ஒரு சிறுகதை எழுதுக.

16. வழக்கு என்றால் என்ன ? தகுதி வழக்கினை விளக்குக.

17. மாணவர்களின் பேச்சாற்றலை வளர்க்க வகுப்பறையில் நீவிர் மேற்கொள்ளும் செயல்பாடுகளை கூறுக.

18. பிறிது மொழிதல் அணியை உதாரணத்துடன் விளக்குக.

## பகுதி - II

## பிரிவு - அ

**அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

19. பாடநூல் ஆய்வின் ஐந்து பண்புகளை கூறுக.

20. வலி, வளி, வழி – இம்மூன்று சொற்களையும் ஒரே வாக்கியத்தில் அமைத்துக்காட்டுக.

21. கல் என்னும் வினையடியிலிருந்து ஒரு வினைமுற்றுச் சொல், ஒரு தொழில் பெயர் சொல் உருவாக்குக.

22. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
    நிற்க அதற்குத் தக
– இக்குறட்பாவில் இடம் பெற்றுள்ள முற்று மோனைச் சொற்களை எழுதுக.

23. எளிமையாக்கல் காரணமாக நம்முடைய மாணவர்கள் செய்யும் வரிவடிவப் பிழைகளை சுட்டுக.

24. மொழி பயிற்றாய்வுக்கூட அமைப்பு பற்றி எழுதுக.

25. இணையத்தில் உள்ள தமிழ் மென்பொருள்களை எழுதுக.

26. மதிப்பீட்டின் வகைகள் எத்தனை ? அவை யாவை ?

27. அடைவுத் தேர்வின் வகைகள் யாவை ?

28. கட்டுரை எழுதும் நோக்கங்கள் எவையேனும் நான்கினைக் கூறுக.

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு **ஒவ்வொன்றுக்கும்** 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். 5x4=20

29. பாட ஏற்பாடு/கலைத்திட்டம் குறித்து எழுதுக.

30. சொற்களஞ்சியம் பெருக்கும் முறைகள் எவையேனும் நான்கினை விளக்குக.

31. அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகள் யாவை ?

32. கதைப்பாடல் உத்தி வடிவில் குழந்தைகளுக்கான கதைப்பாடல் ஒன்றை எழுதுக.

33. மொழி பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத் தன்மைகள் யாவை ?

34. சுவடி காட்சியகம் குறித்து நீ அறிவனவற்றை எழுதுக.

35. புறவயத்தேர்வினை உருவாக்கும்பொழுது பின்பற்றப்படுபவை குறித்து எழுதுக.

36. வினாத்தாள் அமைக்கும் முறை பற்றி எழுதுக.

## பகுதி - III

**ஒவ்வொரு** வினாவிற்கும் 500 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். 2x10=20

37. பாடத்திட்டம் என்றால் என்ன ? பாடநூல் அமைப்பு மற்றும் பாடப்பொருள் குறித்து விவரிக்கவும்.

**அல்லது**

பிழைகாணல், குறை களைதல் பற்றி விவரிக்கவும்.

38. மாணவர்களிடம் படைப்பாற்றலை பெருக்கும் உத்திகள் குறித்து எழுதுக.

**அல்லது**

கணினி வரலாறு குறித்து எழுதுக.

-oOo-